பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 25 வியாழக்கிழமை 08.05.2025 கதிர் 180

## இது ரகசியம் அல்ல!

முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நேற்று மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர் லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிற்கு முன்னால் வாக்குமூலம் வழங்க ☞ 2

# வடக்கில் தமிழ் அரசு மீண்டும் பேரெழுச்சி

## கிழக்கிலும் ஆதரவைத் தக்கவைத்தது

நாடாளுமன்றத் தேர்தலில் ஆசனங்களைப் பெறுவதில் பின்னடைவு கண்ட தமிழ் அரசுக் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மீண்டும் தனிப் பெரும் கட்சியாக, வாக்கு எண்ணிக்கையில் தன்னிகரற்ற கட்சியாகப் பேரெழுச்சி பெற்றுள்ளது. கிழக்கில் நாடாளுமன்றத் தேர்தலில் காட்டிய பேரெழுச்சியைத் தக்கவைத்துக்கொண்ட அதேவேளை, வடக்கில் மீண்டும் அது தனது ஆதிக்கத்தை மீட்டெடுத்துள்ளது.

இதேநேரம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஈ.பி.டி.பி ஆகியன குறிப்பிடத்தக்க சில சபைகளில் ☞ 2

## கொழும்பு முழுவதும் ஆளும்தரப்பு வசம்

இடம்பெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள 13 உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆளும் தேசிய மக்கள் சக்தி கட்சி அதிக வாக்குகளைப்பெற்று வெற்றியீட்டியுள்ளது. இதில் 9 உள்ளூராட்சி மன்றங்களில் அதிக ஆசனங்களை பெற்றுக்கொண்டு ஆட்சியை உறுதிப்படுத்திக்கொண்டுள்ள போதும் 4 உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சபையை ஆளும் தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டிக்கொண்டுள்ளது. என்றாலும் அவர்களுக்கு அதில் 48 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளபோதும் கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிட்ட எதிர்க்கட்சிகளுக்கு 69 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால் கொழும்பு மாநகர சபையில் தனித்து ஆட்சியை அமைப்பதற்கு தேசிய மக்கள் சக்திக்கு முடியாமல் இருக்கிறது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தின் கொலன்னாவ நகர சபையை தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுக்கொண்டுள்ளது. அதில் அவர்களுக்கு 9 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளபோதும் எதிர்க்கட்சிகளுக்கு 10 ஆசனங்கள் ☞ 8

# ஆளும்தரப்புக்கு தேர்தல் மூலம் மக்கள் கடும் எச்சரிக்கை விடுப்பு

## ஐதேக தவிசாளர் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெறுபேறுகள் மூலம் நாட்டு மக்கள் ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். குறிப்பாக வடக்கு கிழக்கு மக்கள் ஆளும்தரப்புக்கு நல்லதொரு செய்தியைத் தெரிவித்திருக்கின்றார்கள் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

தேர்தலில் காலி மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சி வேட்பாளர்களை காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் சந்தித்துப் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் நடவடிக்கைகள் தோல்வியடைந்துள்ளன என்ற செய்தியை நாட்டு மக்கள் இந்தத் தேர்தல் பெறுபேகள் மூலம் தெரிவித்துள்ளனர். ஆட்சிக்கு வந்து 6 மாதங்களுக்குள் மக்கள் ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேசங்களை பார்க்கும்போது ஆளும்தரப்புக்கு பெரும் செய்தியை வழங்கி இருக்கிறது. அதேபோன்று 339 உள்ளூராட்சிமன்றங்களில் 175க்கும் அதிகமான மன்றங்களில் ஆளும்தரப்பால் நூற்றுக்கு 50 வீத வாக்குகளைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருக்கிறது.

இன்னும் சில உள்ளூராட்சி மன்றங்களில் நூற்றுக்கு 34, 37 போன்ற சதவீத வாக்குகளே கிடைத்துள்ளன. பெரும்பான்மையான சபைகளில் நூற்றுக்கு 65 முதல் 70 சதவீதம் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளிடமே இருக்கிறது. அதிகமான உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மையை ஆளும்தரப்புக்கு பெற்றுக்கொள்ள போகும் என நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன். எவ்வாறு இருந்தாலும் இந்த தேர்தல் பெறுபேறுகளுடன் ஒன்றிணையக்கூடிய நிலை ஆரம்பிக்கும் என நினைக்கிறேன். ☞ 8

## மாணவியை கடத்த முயன்ற நபர் கைது

கொழும்பு கறுவாத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலைக்கு அருகில் 8 வயது மாணவி ஒருவரை கடத்திச் செல்ல முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கறுவாத்தோட்டம் பிளவர் வீதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை (2) பிற்பகல், பாடசாலை நிறைவடைந்ததும் 8 வயதுடைய மாணவி ஒருவரை அழைத்துச் செல்ல அவருடைய தாயார் காரில் வருகை தந்துள்ளதுடன் ☞ 2 மாணவியை காரின் பின் இருக்கையில் அமர வைத்த போது, இனந்தெரியாத ஒருவர் வலுக்கட்டாயமாக காரின் பின் இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டார். குறித்த நபர் மாணவியின் தாயை காரை முன்னோக்கி செலுத்துமாறு கட்டாயப்படுத்திய நிலையில்.

காரில் இருந்து இறங்கிய தாய் அருகில் இருந்தவர்களிடம் உதவி கோரியுள்ளார். இதன்போது பாடசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வருவதை அவதானித்த சந்தேகநபர் அங்கிருந்து தப்பி சென்றிருந்தார். சம்பவம் ☞ 8

# 25% பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவது அவசியம்

## பெண்கள் அமைப்புக்கள் வலியுறுத்து

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சிமன்றங்களில் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டிய சட்டரீதியான கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. எனவே ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் இளம் பெண்கள் உள்ளடங்கலாக 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதனை தேர்தல்கள் ஆணைக்குழு இறுக்கமாக நடைமுறைப்படுத்தவேண்டும். அதிலிருந்து தவறும் அரசியல் கட்சிகள் பொறுப்புக்கூறச்செய்யப்படவேண்டும் என 34 பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

மன்னார் பெண்கள் அபிவிருத்திப்பேரவை, சமூக அபிவிருத்தி நிலையம், கிழக்கு சமூக அபிவிருத்தி நிதியம், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு, முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியம் என்பன உள்ளடங்கலாக 34 பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் ☞ 8

# அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு ஜேவிபி எந்தவொரு பயங்கரவாதத்திலும் ஈடுபடும்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

ஜேவிபியினரை ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் நுழைய ஜே.ஆர். ஜயவர்தனவும் ரணசிங்க பிரேமதாசாவும் அன்று அனுமதித்தனர். இருப்பினும் அவர்களின் தற்போதைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள எந்தவொரு பயங்கரவாதச் செயலையும் செய்யும் என்ற சந்தேகம் ஏற்படுவதாக ஐக்கிய மக்கள் ☞ 2

# உலக வங்கியின் தலைவர் அநுரவைச் சந்தித்து பேச்சு

இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கிக் குழுமத்தின் தலைவர் அஜய் பங்காவிற்கும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் இடையிலான சந்திப்புப் புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகே உலக வங்கியின் தலைவர் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்ள உலக வங்கி குழுமம் எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

டிஜிட்டல் மயமாக்கல், சுற்றுலாக் கைத்தொழில், விவசாயம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் துறை, உள்ளிட்ட குறுகிய காலத்தில் பயனடையக்கூடிய துறைகளை அடையாளம் கண்டு அதனை ☞ 2

# ஆறே மாதங்களில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றோம்

## பொது ஜன பெரமுனவின் பெருமிதம் இது

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் பெரும் பின்னடைவை எதிர்கொண்டிருந்தோம். ஆனால் இந்த தேர்தலில் சுமார் 9 இலட்சத்து 54 ஆயிரம் வரையிலான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம். 6 மாதகாலத்துக்குள் மக்க ளின் நம்பிக்கையை வெற்றிக் கொண்டுள்ளோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் ☞ 8

## இனி இது .....

வந்த சமயத்தில் கைது செய்யப்பட்டார் என்பதே நேற்று ஊடகங்கள் அனைத்திலும் வெளியாகி இருந்த செய்தி. அவர் எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்பது வெளியாகி இருக்கவில்லை.

ரம்புக்வெல மீது ஏற்கனவே மோசடி வழக்கு இருக்கும் நிலையில் மருந்துக் கொள்வனவு அல்லது மருந்துவத்துறை சார் ஊழல்ததிலாவது சம்பந்தப்பட்டிருப்பார் என்கிற வகையில் பெரும்பாலானவர்கள் இதனை ஒரு செய்தியாகக் கடந்து சென்றுவிட்டனர். ஆனால், அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் இங்கு பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வயிற்றில் புளியைக் கரைக்கும். தமக்கும் எப்போது ஆணைக்குழுவில் இருந்து அழைப்பாணை வருமோ என்று இன்று முதல் வயிற்றில் புளியைக் கரைக்கும். இனி ஒவ்வொரு நாளும் நிம்மதியற்றே கழியும்.

இதையெல்லாம் ஏன் சொல்கின்றேன் என்றால், ஹெகலிய கைது செய்யப்பட்டதற்கான காரணம்,

வெகுஜன ஊடகம், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார அமைச்சரின் தனிப்பட்ட பணியாளர் பதவிகளில் தனது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அரசியல் ஆதரவாளர்களை நியமித்துவிட்டு, அவர்களை வேலைக்கு அமர்த்தாமல், அவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்காமல் அந்தப் பணத்தையெல்லாம் தானே சுருட்டிக்கொண்டார் என்பதுதான் அவர்மீதான தற்போதைய குற்றச்சாட்டு. இந்த வகையில் அவர் இலங்கை அரசுக்கு 8 மில்லியன் ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படுத்தினார் என்ற வகையில் சந்தேகநபராக அவர் லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவால் பெயரிடப்பட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டின் கீழ்தான் அவரை மே 20 வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டார்.

இதன்படி பார்த்தால் எமது பகுதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும்கூட இப்படி தமது உதவியாளர்கள், ஆய்வு உதவியாளர்கள் போன்ற பணியிடங்களுக்கு தமது மனைவி, பிள்ளைகள் மற்றும் நெருங்கிய உறவினர்களின் பெயர்களைக் கொடுத்துவிட்டு அவர்களின் சம்பளத்தையும் சேர்த்துதாமேதான் பெற்று வந்திருக்கிறார்கள், வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அந்தச் சம்பளப் பணத்தை எல்லாம் பிள்ளையின் வங்கிக் கணக்கிலும் மனைவியின் வங்கிக் கணக்கிலுமா வைப்பிலிட்டிருப்பார்கள். ஒருவேளை அப்படி வைப்பிலிட்டிருந்தால் தப்பிவிடுவர். இல்லையென்றால் இப்படி அரசுப் பணத்தைச் சுருட்டிவிட்டார்கள் என்று அவர்கள் மீதும் ஆளும் தரப்பு எப்போது வேண்டுமானாலும் பாயக்கூடும்.

அதி-லும் மூன்று, நான்கு தடவைகள் என்று தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களின் உதவியாளர்கள் சம்பளப் பணத்தை 15 முதல் 20 வருடங்களுக்குக் கணக்கிட்டால் பல மில்லியன்கள் வரும், அவ்வளவு பணத்தை ஆட்டையைப் போட்டு அரசுக்கு நட்டம் ஏற்படுத்தினார்கள் என்று இப்போது கணக்குக் காட்டப்போகிறது அரசு. என்ன செய்யப் போகிறார்களோ?

எதிர்க்கட்சிகளிலிருந்தபடி ஆளும்தரப்புக்கு ஆட்டம் காட்டும் அரசியல்வாதிகளின் மூக்கணாங்கயிறு இப்போது ஆளும்தரப்பின் பிடியில். இனி என்னவெல்லாம் நடக்குமோ....!

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதிக்கம் செலுத்தியுள்ளன. அதனடிப்படையில் மாவட்ட ரீதியான முடிவுகளைப் பார்க்கையில்,

### யாழ்.தேர்தல் மாவட்டம்

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் காணப்படும் 17 உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யாழ். மாநகர சபை, நெடுந்தீவுப் பிரதேச சபை, வேலனை பிரதேச சபை, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, வலிகாமம் வடக்கு பிரேதச சபை, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை, பருத்தித்துறை பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை ஆகிய 12 சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை ஆகிய இரண்டு சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது. ஈ.பி.டி.பி. ஊர்காவற்றுறைப் பிரேதச சபையில் மாத்திரம் முதன்மை பெற்றுள்ளது.

இதேநேரம், காரைநகர் பிரதேச சபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் கூட்டணி, சுயேச்சைக்குழு ஆகியன தலா 2 ஆசனங்களையும் தமிழ் அரசுக் கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

சாவகச்சேரி நகரசபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆகியன தலா அறு ஆசனங்களைப் பெற்று சமநிலையில் இருப்பதோடு தேசிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களையும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி இரண்டு ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

### கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் உள்ள கரைச்சி பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ள அதேவேளை, கரைச்சி, பூநகரி ஆகியவற்றில் அக்கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. இதனால் அவ்விரு சபைகளிலும் தமிழ் அரசுக் கட்சி தனித்து ஆட்சி அமைக்கவுள்ளதோடு, பச்சிலைப்பள்ளி பிரேசசபையில் இரண்டாவது அதிக ஆசனங்களைக் கொண்டிருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் வாய்ப்பு உள்ளது.

### மன்னார் தேர்தல் மாவட்டம்

மன்னார் தேர்தல் மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களில் மன்னார் மாநகர சபை, மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகியவற்றில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முதன்மை பெற்றுள்ளது. எனினும் இந்த மூன்று சபைகளிலும் ஆட்சி அமைப்பதற்கு அக்கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. இந்த நிலையில் ஆட்சியை அமைப்பதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் ஒத்துழைப்புக்களை பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, முசலி பிரதேச சபையில், ஐக்கிய மக்கள் சக்தியும், நானாட்டான் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியும் முதன்மை பெற்றுள்ளபோதும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை அக்கட்சிகள் கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் இலங்கைத் தொழிலாளர் கட்சி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் ஒத்துழைப்புகள் ஆட்சி அமைப்பதற்குத் தேவையாக உள்ளன.

நானாட்டான் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி வேறெந்த தரப்புடனும் ஒன்றிணையாத பட்சத்தில் எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளதாகக் கூறப்படுகின்றது.

### முல்லைத்தீவு தேர்தல் மாவட்டம்

முல்லைத்தீவு தேர்தல் மாவட்டத்தில் உள்ள கரைத்துறைப்பற்று பிரதேச சபை, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை, மாந்தை கிழக்கு பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் அறுதிப் பெரும்பான்மையை தமிழ் அரசுக் கட்சி பெற்றுக்கொண்டுள்ளதோடு ஏனைய மூன்று சபைகளிலும் ஆட்சி அமைப்பதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கை தமிழர் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் ஒத்துழைப்புக்களைப் பெற வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வவுனியா தேர்தல் மாவட்டம்

வவுனியா தேர்தல் மாவட்டத்தில் வவுனியா மாநகர சபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தொழிலாளர் கட்சி ஆகியன தலா நான்கு ஆசனங்களைப் பெற்று சமநிலையில் உள்ளதோடு தமிழ் அரசுக் கட்சி மூன்று ஆசனங்களைப் பெற்று இரண்டாம் நிலையில் உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு ஆசனங்களுடன் மூன்றாம் நிலையிலும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாய தேசியக் கூட்டணி, சுயேச்சைக்குழு ஒன்று, இரண்டு ஆகியன தலா ஒவ்வொரு ஆசனங்களையும் கொண்டுள்ளன.

இதேநேரம், வவுனியா வடக்கு பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களுடன் முன்னிலையில் உள்ளபோதும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 5 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 4 ஆசனங்களையும், ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணி 3 ஆசனங்களையும் இலங்கை தொழிலாளர் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும் கொண்டுள்ளதோடு சர்வஜன சக்தி ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.

வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி ஆகிய தலா மூன்று ஆசனங்களையும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஜனநாயக தேசியக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் கட்சி ஆகியன தலா 2 ஆசனங்களையும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், சுயேச்சைக்குழு 2 ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும் இலங்கைத் தமிழ அரசுக் கட்சி 5 ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஜனநாயக தேசியக்கூட்டணி, இலங்கை தொழிலாளர் கட்சி ஆகியன தலா இரண்டு ஆசனங்னகளையும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், சர்வஜன சக்தி, சுயேட்சைக்குழு 2, சுயேச்சைக்குழு 3 ஆகியன தலா ஒவ்வொரு ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளன.

வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபையில், தேசிய மக்கள் சக்தி 7 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும் சுயேச்சைக்குழு 2 இரண்டு ஆசனங்களையும் 2 இலங்கை தொழிலாளர் கட்சி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சர்வஜன சக்தி ஆகியன தலா ஒவ்வொரு ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளன.

அந்த வகையில் வவுனியா தேர்தல் மாவட்டத்தில் உள்ளஎந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திலும் ஆட்சியை அமைத்துக்கொள்வதில் ஆகக்குறைந்தது மூன்றுக்கு மேற்பட்ட தரப்பினர் ஒன்றிணையவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

## உலக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைஎடுத்தல் மற்றும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அந்த நோக்கத்திற்கான அரசாங்கத்தின் கொள்கைத் திட்டம் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

உலக வங்கி குழுமத்தின் விசேட ஆலோசகர் ட்ரெவர் கின்கெய்ட், இலங்கை, நேபாளம் மற்றும் மாலை தீவுகளுக்கான உலக வங்கியின் பணிப்பாளர் டேவிட் சிஸ்லன், சர்வதேச நிதி நிறுவனத்தின் தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் இமாத் ஃபகூரி, மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி கிவோர்க் சார்கஸ்ஜான் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இலங்கை ஆளும்தரப்பின் சார்பாக, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அப்பொன்சு மற்றும் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அதிகாரத்தைத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது ரஞ்சித் மத்தும பண்டார இதனைக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக ஆளும்தரப்பு மீதான தங்கள் அதிருப்தியை மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். புதிய ஆட்சி அமைக்கப்பட்டு சுமார் 5 மாதங்களுக்குப்பிறகு நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில், மக்கள் ஆளும்தரப்பை நிராகரித்துவிட்ட நிலைமையே வெளிப்பட்டுள்ளது. ஆளும்தரப்பின் வாக்கு விகிதம் பெரிதாக வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 68 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. ஆனால் உள்ளூராட்சித் மன்றத் தேர்தலில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 62 சதவீத வாக்குகளைப் பெற்றது. இருப்பினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு 43 சதவீதமாகக் குறைந்துள்ளது.

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 18 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியால் 22 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற முடிந்துள்ளது. இதேபோல், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிற கட்சிகளும் தமது வாக்கு சதவீதங்களை அதிகரித்துக் கொண்டுள்ளன. மக்கள் ஆளும்தரப்பைத் தெளிவாக நிராகரித்துவிட்டனர். இது எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். கடந்த 5 மாதங்களாக, ஆளும்தரப்பின் செயற்பாடுகளால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

எதிர்காலத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவும்போது எதிர்க்கட்சியின் ஒற்றுமையை ஆளும்தரப்புக்கு நிரூபிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வென்ற அதிக எண்ணிக்கையிலான உள்ளூராட்சி மன்றங்களில் ஆளும்தரப்புக்கு பெரும்பான்மை இல்லை. மக்களின் வாக்குகளுக்கு மதிப்பு அளித்து, அதிக அளவிலான உள்ளூராட்சி மன்றங்களில்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



# நிரந்தரமான அரசியல் தீர்வு என்கிற எமது இலக்கிற்கு வட, கிழக்கு தமிழர்கள் மீள ஆணையைத் தந்துள்ளனர்

## சாணக்கியன் தெரிவிப்பு




நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை அடைய வேண்டுமென்ற எங்களுடைய இலக்கிற்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணையை தந்திருக்கிறார்கள் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சியானது வடக்கு, கிழக்கிலே அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கிறது.

நாடு யாரிடமாவது இருக்கட்டும், தமிழர் தாயகம் தமிழரசோடு என்பது நாங்கள் தேர்தல் பரப்புரை காலத்தில் சொன்னதற்கமைய வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற மக்கள் எங்களுக்கு அமோகமான வெற்றியைத் தந்திருக்கின்றார்கள். இது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வெற்றி என்பதைத் தாண்டி இது தமிழர்களுடைய எதிர்காலத்துக்கான ஆணையொன்றை தமிழ் மக்கள் தமிழ் அரசுக் கட்சியிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை அடைய வேண்டுமென்ற எங்களுடைய இலக்கிற்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணையை தந்திருக்கிறார்கள்.

அந்த வகையில் விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கில் நாங்கள் கூடுதலான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க இருக்கிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாங்கள் போட்டியிட்ட பதினொரு சபைகளிலும் ஆசனங்களைப் பெற்றிருக்கின்றோம். பெரும்பான்மையாகதமிழர்கள்இருக்கின்றஅனைத்து பிரதேசசபைகளிலும்நாங்கள் பெரும்பான்மையான ஆசனங்களைவென்றிருக்கின்றோம்.அனைத்துபிரதேச சபைகளிலும்ஆட்சியமைக்கக்கூடிய சூழல் இருக்கின்றது. அத்துடன் நாங்கள்சிறுபான்மையாகஇருக்கின்ற இரண்டு பிரதேச சபைகளிலும் ஆசனங்களை பெற்றிருக்கின்றோம்.

இன்று மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து முதற்கட்டமாகபட்டியல்ஆசனங்கள், சபைஅமைத்தல்,யாருடன்இணைவது என்பது பற்றி கலந்துரையாடினோம்.

இன்று நாங்கள் போட்டியிட்ட அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களையும் ஒவ்வொரு சபையாக அழைத்து, அந்தந்த சபைகளில் பட்டியல் உறுப்பினர்கள் யார் என்றும் தவிசாளர், பிரதி தவிசாளர் பற்றி எவ்வாறு தீர்மானம் எடுப்பது என்பது பற்றியும் யாருடன் நாங்கள் இணைந்து ஆட்சியமைப்பது என்பது பற்றியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கலந்துரையாடவுள்ளோம்.

எதிர்வரும் இரண்டு, மூன்று வாரங்களுக்குள் இலங்கை தமிழ் அரசுக் கட்சி அனைத்து சபைகளிலும் ஆட்சியமைக்கக்கூடிய ஒரு வியூகத்தை நாங்கள் அமைக்கவிருக்கிறோம். - என்றார்.




இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கூறுகையில் -

உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதித்துவ முறை என்பது சற்று சிக்கலான முறை என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படியான சிக்கலான ஒரு முறை காணப்பட்டபோதிலும் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற அனைத்து சபைகளிலும் நாங்கள் கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கிறோம்.

வாக்குத்தொகை அடிப்படையில் நாங்கள் முதலாவதாக இருக்கின்றோம். சபைகளின் பிரதிநிதித்துவத்தை கைப்பற்றியிருப்பதன் அடிப்படையிலும் நாங்கள் முதலாவதாக இருக்கின்றோம். பிரதிநிதித்துவ முறையில் காணப்படுகின்ற சில குறைபாடுகள் காரணமாக நாங்கள் அதிகப்படியான வாக்குகள் பெற்றிருந்தாலும் தொங்கு நிலையான ஆசனங்கள் எனப் பலவாறான ஆசனங்கள் காணப்படுகின்றபடியால் அவற்றையெல்லாம் கடந்து ஒன்பது உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சியமைக்கக்கூடிய அளவுக்கு எமது கட்சி உரிய ஆசனங்களை தக்கவைத்துக்கொண்டிருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் சபைகளை அமைத்து சுமுகமானமுறையில்அவற்றைகொண்டுசெல்லக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்துவோம்.

சிலகட்சிகள்கூட்டணியாகச்சேர்ந்துகடுமையான பிரயத்தனங்கள் செய்தும் கூட அவர்களுடைய முயற்சிகள் வெற்றி பெறவில்லை. தமிழர் தாயகம் தமிழ் அரசுக் கட்சியின் பக்கம் இருக்கிறது என்பதை இவ்விடத்தில் கூற முடியும். எதிர்காலத்தில் நாங்கள் சிறப்பான செயற்பாடுகளையும் முன்கொண்டு செல்வோம்.

தேசிய மக்கள் சக்தியானது தாங்கள் நடுநிலை வகிப்பதாக கூறியிருப்பதாக அறிய முடிகிறது. நாங்கள் தமிழ்த் தேசியம் சார்ந்து சிந்திப்பவர்களாக இருக்கின்றபடியால் தமிழ்த் தேசிய எண்ணத்தோடு இருப்பவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுப்போம். மற்றையவர்கள் சிநேகபூர்வமாக எங்களுக்கு ஆதரவு தருவதற்கு முன்வருகின்றபோது பரஸ்பரம் நாங்கள் ஆதரவுகளை வழங்கி சபைகளை அமைக்கவேண்டிய தேவை இருக்கிறது.

நாங்கள் முதலாவதாக இருக்கின்றோம். ஏனென்றால், மட்டக்களப்பு பல்லினமும் வாழும் ஒரு பிரதேசமாக இருப்பதால் பரஸ்பரம் புரிந்துணர்வு, பரஸ்பர விட்டுக்கொடுப்பு என்பது தவிர்க்க முடியாத விடயமாக உள்ளது. அதனால், அவற்றை கையாளவேண்டிய தார்மீக பொறுப்பு எங்களிடம் இருக்கிறது எனத் தெரிவித்தார்.

# காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி முஸ்லிம் காங்கிரஸின் வசமாகும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. விசேட அறிக்கை

உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் முடிவடைந்த நிலையில் பெரும்பாலான சபைகளில் எவருக்கும் தனித்து ஆட்சியமைக்க முடியாமலிருப்பதாகவும் அனைத்து சவால்களை கடந்து தமது அணியினர் காத்தான்குடி நகரசபையில் அனைத்து வட்டாரங்களையும் வெற்றி கொண்டு பெரும்பான்மை உறுப்பினர்களைப்பெற்று ஆட்சியமைக்கவிருக்கிறோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

புதன்கிழமை அவர் வெளியிட்ட விஷேட அறிக்கையிலேயே பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் நகர சபை மற்றும் ஓட்டமாவடி பிரதேச சபைகளில் எவரும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இருந்த போதிலும் இவ்விரண்டு சபைகளையும் முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றுவதற்கான அனைத்து வியூகங்களையும் தாம் வகுத்துள்ளதாவும் இந்த இரண்டு சபையும் முஸ்லிம் காங்கிரஸே கைப்பற்றுமெனவும் அதில் எமக்கு எந்த சவாலும் இல்லையெனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, எமது கட்சிக்கு வாக்களித்த உடன்பிறப்புக்கள் மற்றும் கட்சியின் வெற்றிக்காக அயராதுழைத்த கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், போராளிகள், சமூக ஆர்வலர்கள், ஊடக நண்பர்கள் அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். - என்றார்.

# கிண்ணியாவில் ரஹ்மானியா நகர் ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி மாலையிட்டு வெற்றிக் களிப்பு

## கால்பந்து சின்ன சுயேச்சை வேட்பாளர் நளீர் தெரிவிப்பு

( ஹலால்தீன் )





கிண்ணியா நகர சபைக்கான தேர்தலில் ரஹ்மானியா வட்டாரத்தில் எஸ்.ஜே.பி. சார்பாக சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டிய எம்.எம்.மஹ்திக்கான வரவேற்பும் பால் சோறு வழங்கும் நிகழ்வும் நேற்று மாலை 5.30 மணிக்கு ரஹ்மானியா நகரில் இடம்பெற்றது.

இம்முறை ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக கிண்ணியா நகர சபைக்கான தேர்தலில் ரஹ்மானியா நகர் வட்டாரம் சார்பாக போட்டியிட்டு சுமார் 721 வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவரை வரவேற்கும் நிகழ்வு நேற்று மாலை ஐந்து முப்பது மணிக்கு ரஹ்மானியாநகரில்உள்ள ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி மாலையிட்டு வரவேற்றதுடன் பாற்சோறு வழங்கி வெற்றிக் களிப்பை கொண்டாடினர்.

இக்களிப்பின் பின் ஊடகளுக்கு கருத்து தெரிவிக்கும் போது -

என்னை தெரிவு செய்த மக்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

இம்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதை எனது நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய அரசியல் பிம்பங்களின் தொடக்கம்

2025 மே 6ஆம் தேதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகள், இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய திருப்புமுனையாகக் கருதப்படலாம். தேசிய மக்கள் சக்தி (NPP) பல்வேறு சபைகளில் பெரும் வாக்குகளை பெற்றாலும், பெரும்பான்மையுடன் வெற்றிபெறும் இடங்களில் தேக்க நிலையை சந்தித்துள்ளது. இதன் மூலம், மக்கள் எப்போதும் ஒரே அரசியல் பயணத்திற்குள் சிக்காமல் மாற்றத்தை விரும்புகின்றனர் என்பதையே உறுதிப்படுத்துகிறது.

இத்தேர்தல், கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் நிர்வாக இடர்பாடுகளுக்கு பின்னர் மக்களால் நன்கு கணிக்கப்படும் கருத்துத் தெரிவாக அமைந்துள்ளது. ஜனநாயகத்தின் அடிப்படை நிலையான உள்ளூராட்சி நிர்வாகத்திற்கு மக்கள் முக்கியத்துவம் அளித்து, தங்களது வாக்குகள் மூலம் புதிய அரசியல் சிந்தனைகளை முன்வைத்துள்ளனர். இதனால், பழைய கட்சிகள் மட்டுமின்றி புதிய அரசியல் சக்திகளும் மக்கள் மனதில் இடம் பிடிக்கத் தொடங்கியுள்ளன.

சமகி ஜன பலவேகயா (SJB), தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA), மற்றும் இலங்கை சுதந்திரக் கட்சி (ஸ்ரீலிய்உண) போன்ற பழம்பெரும் கட்சிகளும் தங்கள் பகுதிகளுக்கேற்ப வரையறுக்கப்பட்ட ஆதரவை பெறுவதில் வெற்றி கண்டுள்ளன. இதனாலேயே, நாட்டின் அரசியல் எதிர்காலம் கூட்டணி அரசியல் சூழலில் நகரும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கின்றன.

இந்தத் தேர்தல் முடிவுகள், 2025 அல்லது 2026ல் நடைபெவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான 'அடிப்படை மனநிலை சர்வே' எனப் பார்க்கலாம். மக்கள் விடியல் அரசியல், சமூக நலன்கள் மற்றும் ஊழலற்ற நிர்வாகம் குறித்த கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளனர். இதை அரசியல் கட்சிகள் நேர்மையாக வாசிக்காவிட்டால், எதிர்கால வெற்றிக்கு வாய்ப்பு குறையும்.

அதிக சபைகளில் யாரும் பெரும்பான்மை பெறாமல் உருவாகும் அதிகாரப் பகிர்வு, நவீன ஜனநாயகத்திற்கு சவாலாக இருப்பினும், அதனையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு, மக்கள் நலனுக்காக கட்சிகள் ஒன்றிணைந்து செயல்படும் என்று மக்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கையை கட்சிகள் வீணடிக்கக்கூடாது. அப்படிச் செய்வது கட்சிகளினதும் அரசியல்வாதிகளினதும் சுயநலத்தின் வெளிப்பாடு என்பதால் மக்கள் மீண்டும் இந்த அரசியல் மீது வெறுப்புக்கொள்வதைத் தவிர்க்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டியது மிக அவசியம்.

# கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்கும்

### ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு




கொழும்பு மாநகர சபையில் புதிய நிர்வாகத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளுடன் இணைந்து அமைக்கும். புதிய மேயர் எமது கட்சியைச் சேர்ந்தவரே நியமிக்கப்படுவார். ஆளும் தரப்பு பெரும்பான்மையைப் பெறாத, பிற உள்ளூராட்சி சபைகளில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஏனைய கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; -

அரசாங்கம் அமைக்கப்பட்டு குறுகிய காலத்தில், உள்ளூராட்சி சபைத் தேர்தலின் ஊடாக அரசாங்கம் தொடர்பான தங்கள் கருத்தை மக்கள் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அரசாங்கம் அமைக்கப்பட்டு சுமார் 5 மாதங்களுக்குப் பிறகு நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில், மக்கள் அரசாங்கத்தை நிராகரித்துவிட்ட நிலையைக் காட்டுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்ற கட்சி உள்ளூராட்சி நிறுவனங்களையும் வென்றுள்ளன. ஆனால் வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் வாக்கு விகிதம் குறைந்துள்ளமு.

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 68 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் விரைவான சரிவு ஏற்பட்டுள்ளது. பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 62 சதவீத வாக்குகளைப் பெற்றது. இருப்பினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு 43 சதவீதமாகக் குறைந்துள்ளன.

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 18 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியால் 22 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற முடிந்தது. இதேபோல், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிற கட்சிகளும் தமது வாக்கு சதவீதங்களை அதிகரித்துள்ளன. இருப்பினும், அரசாங்கத்தின் வாக்குப் பலம் குறைந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைப் போலவே, சிறு தரப்பினர் மட்டுமே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். பொதுத் தேர்தலில் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணை இங்கே எடுபடாது. மக்கள் அரசாங்கத்தின் திட்டத்தை நிராகரித்துவிட்டனர். இது எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. கடந்த 5 மாதங்களாக, அரசாங்கத்தின் திட்டத்தால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

எதிர்காலத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவும்போது எதிர்க்கட்சியின் ஒற்றுமையை அரசாங்கத்திற்கு நிரூபிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

வென்ற அதிக எண்ணிக்கையிலான உள்ளூராட்சி மன்றங்களில் அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இல்லை.

மக்களின் வாக்குகளுக்கு மதிப்பு அளித்து, அதிக அளவிலான உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிலைநாட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல கட்சிகளுடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. தேர்தல் விதிகள் மீறப்பட்டுள்ளன. நாட்டின் பிரதமர் கூட தேர்தல் சட்டங்களை மீறுமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார்.

நாட்டில் ஜனநாயக தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் அறிவித்தது. எவ்வாறாயினும், களுத்துறை ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் ஒருவர் சுடப்பட்டுள்ளார்.

தெரணியகல வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுள்ளார். அரசாங்கம் இதுபோன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளது. அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள அரசாங்கம் எந்தவொரு பயங்கரவாதச் செயலையும் மேற்கொள்ளும்.

ஜே.ஆர். ஜயவர்தனவும், ரணசிங்க பிரேமதாஸவும் மக்கள் விடுதலை முன்னணியினரை ஜனநாயக கட்டமைப்பிற்குள் நுழைய அனுமதித்தனர். இருப்பினும், ஜனாதிபதி மற்றும் பிரதமின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் வாக்குப் பலம் குறைந்துபோயுள்ளது.

அரசாங்கம் மீண்டும் பயங்கரவாதத்தின் மூலம் நாட்டை ஆட்சி செய்யுமா என்ற சந்தேகம் எழுகிறது. அரசாங்கத்தின் வாக்காளர் எண்ணிக்கை குறைந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஆதரவாளர்கள் கொண்டாட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களை வெற்றிகொண்டதன் காரணமாக செவ்வாய்க்கிழமை இரவு பட்டாசு கொளுத்திக் கொண்டாடியது.

அத்துடன் வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டு, அவர்கள் ஊர்வலமாகவும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாநகர சபை உட்பட பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழ் அரசு கட்சி வெற்றிவாகை சூடியுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் 20 வட்டாரங்களில் 16 வட்டாரங்களை இலங்கை தமிழ் அரசு கட்சி கைப்பற்றிய நிலையில் வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையிலான மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

மட்டக்களப்பு மாநகர சபையின் பல்வேறு வட்டாரங்களிலும் செவ்வாய்க்கிழமை மாலை வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றதுடன் வேட்பாளர்களை மக்கள் கொண்டாடிய நிகழ்வும் நடைபெற்றது.

இதேபோன்று ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வெற்றிபெற்றதையடுத்து அங்கு ஆதரவாளர்கள் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் போட்டியிட்டு அதிகூடிய வாக்குகளைப் பெற்ற இலங்கை தமிழ் அரசு கட்சியின் வேட்பாளரும் ஊடகவியலாளருமான செ.நிலாந்தனின் ஆதரவாளர்களால் கட்சியின் சின்னத்தின் வடிவம் கொண்ட கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.









# வவுனியா மாநகர சபையில் ஒரு வட்டாரத்திலும் வெற்றி பெறாத இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்இலங்கைதமிழரசுக்கட்சிவவுனியா மாநகர சபையில் ஒரு வட்டாரத்தில் கூட நேரடியாக வெற்றி பெறாது பின்னடைவைச் சந்தித்துள்ளது.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட தமிழ் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தியை பின்தள்ளி இலங்கை தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. எனினும் வடக்கின் நுழைவாயிலாக விளங்கும் வவுனியா மாநகர சபையில் கடந்த முறை தமிழரசுக் கட்சி 6 உறுப்பினர்களை கொண்டிருந்த போதும் இம்முறை அத்துடன், தேசிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் கட்சி என்பன தலா நான்கு ஆசனங்களைப் பெற்று வட்டாரங்களில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

ல்-இலங்க தமிழரசுக் கட்சி விகிதாசார அடிப்படையில் போனஸ் ஆசனம் மூன்றினை வவுனியா மாநகர சபையில் பெற்றுள்ளது. கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைமையில் பாரிய வெற்றியை தமிரசுக் கட்சி பெற்றுள்ளதுடன், மட்டக்களப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்தலைமையிலும், முல்லைத்தீவில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தலைமையிலும், மன்னாரில் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்சாள்ஸ்நிர்மலநாதன் தலைமையிலும், யாழ்ப்பாணத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிவும் வெற்றிகளை பதிவு செய்த போதும்வவுனியாவில்எந்தவொருசபையில் ஆட்சி அமைக்கக் கூடிய ஆசனங்களையோ அல்லது அதிகபட்ச ஆசனங்களையோ தமிழரசுக் கட்சி பெறவில்லை என்பதுடன், முதல் நிலையையும் பிடிக்கவில்லை.

அத்துடன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் அவர்கள் வசிக்கும் மாநகர சபையில் வட்டாரங்களில் தோல்வியடைந்து போனஸ் ஆசனம் 3 ஐ மட்டும் பெற்றுக் கொண்டமை வவுனியாவில் கட்சியின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்துவதாக கட்சி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த நாடாளுமன்ற தேர்தலிலும் வன்னித் தேர்தல் தொகுதியில் உள்ள வவுனியா மாவட்டத்திவ் தமிழரசுக் கட்சி பாரிய பின்னடைவை சந்தித்து இருந்தமை குறிபபிடத்தக்கது. 100

# கிளிநொச்சியில் மாவட்ட பிரதேச சபைகளில் வெற்றிபெற்றவர்களுக்கு மகத்தான வரவேற்பு

இலங்கைதமிழரசுக்கட்சிசார்பாககிளிநொச்சிமாவட்டத்திலுள்ள மூன்று பிரதேச சபைகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்றது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்ட உறுப்பினர்கள், கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்திலும் வழிபாடுகளை மேற்கொண்டனர்.வழிபாடுகளுக்காக உறுப்பினர்கள் சென்ற போது பொலிஸார் பேரணிகளை நடத்த முடியாது எனத் தெரிவித்தனர்.

வெற்றி தொடர்பாக ஊடகங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய இருப்புக்காக கிளிநொச்சி மக்கள் மிகப்பெரிய ஆணையை எமக்கு வழங்கியுள்ளனர். தூயகரங்களோடு தூய நோக்க சிந்தனையோடு அறத்தின் வழி கௌரவமான அரசியலை எமது மக்களுக்கு வழங்குவோம். அபிவிருத்தி பணிகளிலும் நிரந்தரமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும் அதற்குரிய முன்னேற்றத்தைக் காட்டுவதற்கும் இந்த காலம் பயன்பாடுடையதாக மாறும் எனக் கருதுகிறோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கான எழுச்சிக்கான தேர்தலாக இந்த தேர்தல் அமைந்திருக்கிறது. தமிழ் மக்கள் நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் மாற்றுக்கருத்துக்களை பிழைகளை விட்டிருந்தாலும் இந்த தேர்தலில் மிகத்தெளிவாக தமிழ்த்தேசியத்திற்கான தமது வாக்குகளை அளித்துள்ளனர்.

ஆகவே வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசியல் அபிலாசை உள்ளது. இப்பொழுது உள்ள அரசாங்கம் தற்போதைய ஜனாதிபதி அனுர அரசாங்கத்திற்கு ஒரு செய்தியாக சொல்லியிருக்கிறார்கள். தமிழ் மக்களுடன் பேசி ஓர் அரசியல் தீர்வை காண போறீர்களா அல்லது வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் சுயாட்சியுடன் வாழக்கூடிய பொதுஜன வாக்கெடுப்பை நடாத்தப்போறீர்களா என்ற செய்தியைத்தான் சொல்லியிருக்கிறது.

சமாதானம் பற்றியும் அதிகாரப்பகிர்வு பற்றியும் மெத்தனப்போக்குடன் உரிய தூரநோக்கு சிந்தணையில்லாமல் இருக்கிற அரசாங்கத்திற்கு இந்த தேர்தல் வடக்கு கிழக்கு தமிழ் மக்களால் அரசியல் தீர்வு என்பது எவ்வளவு முக்கியம் எமக்கு நடந்தது இனப்படுகொலை இதற்கான நேர்மையான நீதியான விசாரணை பொறுப்புக்கூறலை இந்த அரசாங்கம் தர தவறினால் அவர்களுக்குரிய பாடம் கற்பிக்கப்படும் என்ற செய்தியை வடக்கு கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் தெளிவாக சொல்கிறது.எதிர்காலத்தில் தமிழ் கட்சிகளோடு ஒன்றிணைந்து உள்ளூராட்சி மன்றங்களை கொண்டு செல்ல முடியும். 316



# 6 அடி முதலை குடிமனைக்குள் புகுந்தமையால் பெரும் பரபரப்பு

## பொதுமக்கள் மடக்கி பிடிப்பு



மட்டக்களப்பு மாவட்டம், சின்ன ஊறணி பிரதேசத்தில் அமைந்துள்ள குடிமனை பகுதியில் புதன்கிழமை அதிகாலை 6 அடி நீளமுடைய முதலை ஒன்று புகுந்து பரபரப்பை ஏற்படுத்தியது.

விழிப்புடன் இருந்த பிரதேச மக்கள் குறித்த முதலைமீது கட்டுப்பாடுடன் நடவடிக்கை எடுத்து அதை பாதுகாப்பாக மடக்கி பிடித்தனர்.

பின்னர், அவர்கள் உடனடியாக வனஜீவராசிகள் திணைக்களத்தை தொடர்புகொண்டு முதலையை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பில் குடிமனைப் பகுதிகளுக்குள் முதலைகள் புகுந்து வருகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி



(றிபாஸ்).

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி அண்மையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் திருமதி ஏ.எம். முனாஸிர் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்வில் சம்மாந்துரை வலயக் கல்வி பிரதி கல்விப் பணிப்பாளர் பீ.எம். வை. அறபாத் பிரதம அதிதியாகவும், பிரதி கல்விப் பணிப்பாளர்களான எச்.நைரூஸ்கான், ஏ.ஏ.சியாத், ஏ. முஸ்தக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப்பணிப்பாளர் சட்டத்தரணி சீ. எம். ஹலீம் சிறப்பதிதியாகவும் கலந்து கொண்டனர்.



மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளுடன் போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளதுடன் வெற்றிபெற்றவீரர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ் மற்றும்பரிசுபொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததைவிட தற்போது தனியாக தமிழ் அரசுக் கட்சி பலப்பட்டுள்ளது

## சுமந்திரன் கருத்து




இலங்கை தமிழரசுகட்சி பலவீனமடை யவில்லை தமிழ்தேசிய கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததை விட தற்போது தனியாக பலமாக வெளிவந்திருக்கின்றது என இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

கடந்த தேர்தல்களிலே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணைகிடைத்திருக்கவில்லை. 25 வீத வாக்குகளை மாத்திரம் எங்கள் யாழ்;ப்பாணத்திலே பெற்றுவிட்டு தங்களிற்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது என அவர்கள் தெரிவித்தது தவறான கருத்து.

ஆனால் தனியொரு கட்சியாக 2018 இல் தமிழ்தேசிய கூட்டமைப்பாக நாங்கள் போட்டியிட்டு பெற்ற வெற்றியைவிட தனியாக இம்முறை நாங்கள் போட்டியிட்டு பெற்ற வெற்றி மேலானது.

நான்கடந்தகாலங்களில்கூறிவந்திருக்கின்றேன் ஒரு கட்சி தனியாக போட்டியிடுவதை தவிர்த்து ஒன்றாகயிருக்கின்ற கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டு பின்னர், நிர்வாகங்களை அமைப்பது சாத்தியமானது என.

அந்த கணக்கு தற்போது பலருக்கு புரியும் புரியவரும்.

கூட்டமைப்பை உடைத்துவிட்டோம் என சொல்பவர்களுக்கும் இந்த தேர்தல் முடிவுகள் சரியான பாடத்தைப் படிப்பித்திருக்கும்.

இலங்கை தமிரக் சுகட்சி பலவீனமடையவில்லை. தமிழ்தேசிய கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததை விட தற்போது தனியாக பலமாக வெளிவந்திருக்கின்றது.

ஆகவே தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே இருந்தவர்கள், தற்போது ஜனநாயக தமிழ்தேசிய கூட்டமைப்பாக உள்ளனர் அவர்களும் எதிர்காலத்தில் எங்களிற்கு வாய்ப்பளிக்கின்ற போது எல்லா இடங்களிலும் நாங்கள் இவ்வாறான நிலையை சந்திக்கக் கூடியதாக இருக்கும். - என்றார்.

# முல்லைத்தீவில் 4 சபைகளையும் கைப்பற்றியது தமிழ் அரசுக் கட்சி

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முல்லைத் தீவில் நான்கு பிரதேச சபைகளையும் இலங்கை தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அனைத்து முடிவுகளும் வெளியாகியுள்ளன.

இதற்கமைய மாந்தை கிழக்கு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை, புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆகிய 4 பிரதேச சபைகளையும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி - 1,364 வாக்குகளைப் பெற்று 4 உறுப்பினர்களையும் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி - 6,306 வாக்குகளைப் பெற்று 7 உறுப்பினர்களையும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி - 10,816 வாக்குகளைப் பெற்று 11 உறுப்பினர்களையும் துணுக்காய் பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி - 1,594 வாக்குகளைப் பெற்று 4 உறுப்பினர்களையும் பெற்றுள்ளது.

# படு குழியில் விழுந்த காட்டு யானையை காப்பாற்றியதால் யுவதிக்கு நேர்ந்த கதி

அநுராதபுரம், அளுத்வெள பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

அநுராதபுரம், அளுத்வெள அமைந்துள்ள வீடொன்றிற்கு பின்புறத்தில் உள்ள குழியில் காட்டு யானை ஒன்று விழுந்துள்ளது.

பின்னர் பிரதேசவாசிகள் சிலர் இணைந்து குழியில் விழுந்த காட்டு யானையை காப்பாற்றியுள்ளனர்.

இதன்போது , திடீரென குழப்பமடைந்த யானை வீதியில் பயணித்த யுவதி ஒருவரை பலமாகத் தாக்கியுள்ளது.

காயமடைந்த யுவதி சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

## அதிகாரத்தைத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தை நிலைநாட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல கட்சிகளுடனும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

இன்றைய ஆளும்தரப்பு நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. தேர்தல் விதிகள் மீறப்பட்டுள்ளன. நாட்டின் பிரதமர்கூட தேர்தல் சட்டங்களை மீறுமாறு மக்களுக்கு பகிரங்கமாக அறிவுறுத்தினார். நாட்டில் ஜனநாயக தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தது. எவ்வாறாயினும் களுத்துறையில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் ஒருவர் சுடப்பட்டுள்ளார். தெரணியகலவில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுள்ளார். இதுபோன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளது. அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள எந்தவொரு பயங்கரவாதச் செயலையும் இன்றைய என்பிபி மேற்கொள்ளும்.

ஜேவிபியினரை ஜனநாயக கட்டமைப்பிற்குள் நுழைய ஜே.ஆர். ஜயவர்தனவும், ரணசிங்க பிரேமதாசாவும் அனுமதித்தனர். இருப்பினும், தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, மீண்டும் பயங்கரவாதத்தின் மூலம் நாட்டை ஆட்சி செய்வார்களோ என்ற சந்தேகம் எழுகிறது என்றார்.

## மாணவியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டிருந்த நிலையில் புதன்கிழமை (7) மேற்படி சந்தேகநபர் கொலன்னாவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். கைதான நபர் 36 வயதுடைய கொலன்னாவ , வெல்லம்பிட்டிய பகுதியை சேர்ந்தவராவார்.

இதேவேளை சம்பவ இடத்திலிருந்து விலகிச் சென்ற சந்தேகநபர் வாடகை கார் ஒன்றின் மூலம் அங்கிருந்து தப்பிச் சென்றார் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

## ஆறே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் பெறுபேறுகளின் பிரகாரம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சிறந்த முறையில் வெற்றிப்பெற்றுள்ளது. இந்த நாட்டை பாதுகாத்தவர்கள் தான் இந்தக் கட்சியை நிர்வகிக்கிறார்கள். பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி மக்களின் சிந்தனையை திரிபுப்படுத்தித்தான் ஜேவிபி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது.

மக்கள் விடுதலை முன்னணியின் பொய்யை மக்கள் நன்கு விளங்கிக்கொண்டுள்ளார்கள். இந்தத் தேர்தலில் பொது ஜன பெரமுனதான் சவால்களுக்கு மத்தியில் வெற்றிப்பெற்றுள்ளது என்று மகிழ்வுடன் குறிப்பிடவேண்டும். கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் பெரும் பின்னடைவை எதிர்க்கொண்டிருந்தோம். ஆனால் இந்த தேர்தலில் சுமார் 9 இலட்சத்து 54 ஆயிரம் வரையிலான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம். 6 மாதகாலத்துக்குள் மக்களின் நம்பிக்கையை வெற்றிக்கொண்டுள்ளோம்.

எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிணைந்து உள்ளூராட்சிமன்ற நிர்வாகத்தை அமைப்பது தொடர்பில் கட்சியின் அரசியல் குழு கூடி சிறந்த தீர்மானத்தை எடுக்கும். நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு அமைய சிறந்த தீர்மானம் எடுப்போம் - என்றார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால் அங்கும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்கபுர நகரசபையை தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுக்கொண்டுள்ளது. அதில் அவர்களுக்கு 11 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளபோதும் எதிர்க்கட்சிகளுக்கு 14 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால் இங்கும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தின் மொரட்டுவை மாநகர சபையை தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுக்கொண்டுள்ளது. அவர்களுக்கு 26 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதேநேரம் எதிர்க்கட்சிகளுக்கும் மொத்தமாக 26 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால் மொரட்டுவை மாநகர சபையில் ஆட்சியை அமைப்பதிலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

## 25% பெண் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மற்றும் ஆணையாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இதனை வலியுறுத்தியுள்ளன. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்-டுள்ளதாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முடிவடைந்திருப்பதுடன், உள்ளூராட்சிமன்றங்களில் பெண்களின் 25 சதவீத கட்டாய பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை இது மீள நினைவூட்டியிருக்கிறது. இம்முறை தேர்தலில் வாக்களித்தோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், பரப்புரை, வாக்களிப்பு, தேர்தலில் போட்டியிடல், போனஸ் ஆசனத்தில் பதிவுசெய்யப்படல் என தேர்தல் செயன்முறையின் சகல கூறுகளிலும் பெண்கள் உத்வேகத்துடன் பங்கேற்றமையைக் காணமுடிந்தது. இதற்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகித்த அனுபவத்தைக்கொண்ட பெண்கள் பலர் இம்முறை கட்சிகளின் ஊடாகவோ, சுயேட்சையாகவோ போட்டியிட்டனர்.

அதேவேளை இத்தேர்தலில் அநேகமான பெண்கள் அதிகளவு வாக்குகளைப் பெற்றிருப்பதையும்ஷ் மீண்டும் உள்ளூராட்சி மன்ற அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பினைப்பெற்றிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இருப்பினும் பல சிறிய கட்சிகள் ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களையே கைப்பற்றியிருப்பதானது 'ஒவ்வொரு மூன்று ஆசனங்களுக்கு ஒரு பெண்' என்ற பிரதிநிதித்துவ வீதத்தை உறுதிசெய்வதில் சிக்கலை தோற்றுவித்திருக்கிறது. கடந்த கால தேர்தல் நடைமுறைகளை அவதானிக்கையில், பெரும்பாலான கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாக முன்மொழிவதில் தயக்கம் காண்பித்திருப்பதுடன், சில உள்ளூராட்சிமன்றங்கள் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்கு முழுமையாகத் தவறியிருந்தன.

இருப்பினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தில் கடந்த 2017ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டிய சட்ட ரீதியான கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. இந்நிலையில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் இளம் பெண்கள் உள்ளடங்கலாக 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதனை தேர்தல்கள் ஆணைக்குழு கட்டாயமாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

குறித்தவொருகட்சி இரண்டு ஆசனங்களை வென்றிருப்பின், அவற்றில் குறைந்தபட்சம் ஒரு ஆசனமேனும் பெண் பிரதிநிதிக்கு ஒதுக்கப்படவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தவேண்டும். இக்கட்டாய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு அதற்குரிய அங்கீகாரம் பகிரங்கமாக வழங்கப்படும், அதேவேளை, அதனை உறுதிப்படுத்தாத கட்சிகள் பொறுப்புக்கூறச்செய்யப்படவேண்டும் - என்றுள்ளது.

## ஆளும்தரப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஒன்றில் எந்தவொரு கட்சியும் வெற்றி தோல்விக்கு ஆளாகிறது. பொது மக்கள் ஒன்றிணைந்து வழங்கிய வெற்றியைப் பயன்படுத்து மக்கள் எதிர்பார்த்த இலக்கை நோக்கி ஆட்சியாளர்கள் பயணிக்காவிட்டால், மக்கள் இவ்வாறு செயற்பாடுவார்கள். உதாரணமாக, 6000 ரூபா மின்சாரக் கட்டணத்தை 3000 ரூபாவாக்குவதாக தெரிவித்தே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. என்றாலும் தற்போது அது மூன்று மடங்கு அதிகரித்தால், அதிகாரத்தை பெற்றுக்கொள்ளவே தேசிய மக்கள் சக்தி பொய் சொன்னது என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள்.

இந்தத்தேர்தலின்பின்னர் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுச்செயற்படவேண்டி இருக்கிறது. அதேநேரம், தற்சமயம் உலக வங்கி பிரதிநிதி இலங்கையில் தங்கி இருக்கிறார் என்றே நினைக்கிறேன். சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கு நன்கொடை வழங்கும் குழுவும் இந்தத் தேர்தல்பெறுபேறுகள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பார்கள். பொய் வாக்குறுதிகளை வழங்கி அதிகாரத்தை பெற்றுக்கொண்டால் இவ்வாறு இடம்பெறும்.

மேலும் தேர்தலுக்கு முன்னர் நாங்கள் தெரிவித்த விடயங்களில் எந்த மாற்றமும் இல்லை. டிசெம்பர் மாதமாகும்போது மக்கள் பெரும் அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். அந்த அழுத்தங்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்றே ஐக்கிய தேசிய கட்சியாக நாங்கள் ஆராய்ந்து வருகிறோம் - என்றார்.







காலைக்கதிர்
Kalaikkathir

# அரசின் செயற்பாடுகளில் மக்களுக்கு கடும் அதிருப்தி

## கண்டியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

இதற்கு முன்னர் தேசிய மட்டத்தில் நடந்த இரண்டு தேர்தல்களில் வாக்களித்தவர்கள் இன்று இந்த அரசாங்கத்தில் வெறுப்படைந்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

கண்டி,பேராதனை பிரதேசத்தில் தேர்தல் தினத்தன்று வாக்களித்த பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளில் ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், மேலும் கூறுகையில் -

கேள்வி: இந்தத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுகின்றீர்கள்?

பதில்:ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸின்மரச் சின்னத்திலும்,எங்களதுசகோதரக்கட்சியான ஐக்கிய தேசியக் கூட்டமைப்புடனும், சில உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியுடனும் நாங்கள் இந்த தேர்தலில் போட்டியிட்டுள்ளோம்.

குறிப்பாக இந்த விசித்திரமான தேர்தல் நடைமுறையின் காரணமாக எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவது என்பது லேசான காரியம் அல்ல.

குறிப்பாக ஆளுங்கட்சியினரைப் பொறுத்த வரையில், இதற்கு முன்னர் நடந்து முடிந்த இரண்டு தேசிய மட்டத் தேர்தல்களிலும் அவர்கள் பாரிய வெற்றியடைந்திருந்த போதிலும்கூட,இந்த தேர்தலில் குறிப்பிடத்தக்க பின்னடைவை அவர்கள் சந்திக்கப் போகின்றார்கள் என்பது தெளிவாகின்றது அதாவது இன்றுள்ள நிலைமையில் அவர்களுக்கு சிங்கள பிரதேசங்களில் கூட பெரும்பான்மை கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் குறைவு.அதை விடவும்,, சிறுபான்மை பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் மத்தியிலும் அவர்கள் பின்னடைவை சந்திக்கப் போகின்றார்கள் என்பது தெளிவானது.

தேசிய மட்டத்தில் நடந்த இரண்டு தேர்தல்களில் வாக்களித்தவர்கள் இன்று முகம் சுளித்துப் போய் இருக்கின்றார்கள் ; அதாவது, அவர்கள் இந்த அரசாங்கத்தில் வெறுப்படைந்திருக்கின்றார்கள். குறிப்பாக, தமிழ் முஸ்லிம் சமூகங்களைப் பொறுத்தவரையில், இந்த ஆட்சியாளர்கள் வெறும் வெற்று வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றி விட்டார்கள் என்பது போன்ற பல குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்த சூழ்நிலையில் வாக்கெடுப்பு கூட மிகவும் மந்தகதியில் நடந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் ஆர்வம் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது . நான் வாக்களித்த பேராதனை ஹிந்த கொல்ல சீவலி கல்லூரியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் முற்பகல் 10.30 மணியளவில் வாக்களிப்பு வீதம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. வாக்காளர்கள் ஆர்வம் அற்றவர்களாகவே காணப்பட்டார்கள்.

கடந்த ஆறு மாத காலங்களில், இந்த அரசாங்கத்தினுடைய வெற்றுக் கோஷங்களுக்கு அப்பால், அவர்கள் 'வெளிநாடுகளோடு செய்துகொண்ட உடன்படிக்கைகள், நாட்டைக் காட்டிக் கொடுத்த செயற்பாடுகள், நாட்டில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமை, வாய்ச்சவடால் அறிக்கைகளை விட்டமை போன்றவை இந்த அரசாங்கத்தைப் பாதித்திருக்கின்றன.

இந்த தேர்தலில் பொதுவாக, எந்த கட்சியும் பெரும்பான்மை பெற்று தமது சபைகளில் ஆட்சி அமைப்பது இலகுவான விஷயம் அல்ல .கூட்டாகத்தான் அவர்கள் ஆட்சி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் .எங்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதான கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு தேவையானால், சபையொன்றில் அதிகாரத்தை பெறுவதற்கு நாங்கள் ஒத்துழைப்போம்.

இந்த தேர்தல் முறையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன .குறிப்பாக முன்னரும் 2018 ஆம் ஆண்டு தேர்தலில் கூட இவ்வாறான நிலைமை காணப்பட்டது. வட்டார முறை தேர்தல் என்றாலும் கூட விகிதாசார தேர்தல் முறையில் வாக்குகள் பிரிந்து செல்வதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன .

கேள்வி: எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் மாகாண சபை தேர்தல் நடைபெறலாம் எனக்கூறப்படுகிறதே?

பதில்: அடுத்த ஆண்டில்தான் நடத்தப்படலாம் என ஆளும் தரப்பு தகவல்கள் கூறுகின்றன. அரசாங்கம் எதிர்பார்த்ததை விட பின்னடைவு காணப்படுமாக இருந்தால் ,ரணில் விக்கிரமசிங்கவை பின்பற்றி,அதற்கான பணம் இல்லையென கூறி,மாகாண சபை தேர்தலை அவர்கள் பின்போட்டு இழுத்தடிக்கவும் கூடும் .

கேள்வி: வெளிநாடுகளுடன் அரசாங்கம் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் பற்றி என்ன கூறுவீர்களா?

பதில்:நாட்டில் வெளிநாட்டு தலையீடு அதிகரித்திருக்கிறது . அரசாங்கங்களோடு ஒப்பந்தங்களைச் செய்து கொள்கின்றார்கள் அவ்வாறான ஒப்பந்தத்தங்களின் உள்ளடக்கம் என்ன என கேட்டால் அவர்கள் அவற்றை வெளியிட மறுக்கின்றார்கள். அந்த நாட்டுடன் கேட்காமல் அதை வெளியிட முடியாது என கூறுகிறார்கள். இவர் தான் இந்த நாட்டில் இந்திய இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது அதனை அடிமைத்தனம் என்று கூறியவர்கள் .அதற்கு எதிராக நாட்டை தீயிட்டுக் கொளுத்தியவர்கள். இவர்கள் தான் இப்பொழுது அதற்கு முற்றிலும் மாற்றமாக நடந்து கொள்கிறார்கள். இது அடிமைத்தனம் இல்லையா...?

கேள்வி:- தேர்தல் முறையை மாத்திரமல்ல,முழுமையாகவே அரசமைப்பை மாற்ற போவதாக கூறப்படுகின்றதே....?

பதில்:இவ்வாறுதான் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு ஜனாதிபதியும் கூறி வந்தார்கள். ஆனால் , அவ்வாறு நடக்கவில்லை இப்போதைய ஜனாதிபதி நண்பர் அநுர குமார திசாநாயக்க வாக்குறுதி கொடுத்திருந்தாலும் கூட ,இந்த ஜனாதிபதி முறையை அவர் தொடர்வாரா என்பது பற்றி தெரியாது இது பற்றி இன்னும் ஒரு சில மாத காலங்கள் பொறுத்திருந்து பார்த்தால் தெரியவரும். - என்றார்.




ஆரம்பநாள் நிகழ்வு அழைப்பிதழ்
NEITHAL ECO PARK
நெய்தல் சூழல்நேயப் பூங்கா
காலம்: 09 மே 2025
நேரம்: மாலை 04.30
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
Location Map
மண்டைதீவு, யாழ்ப்பாணம்

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பின்னடையவில்லை

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பின்னடையவில்லை. தமிழ் மக்கள் தேசிய அரசியலில் எம்முடன் கைகோர்த்ததை போன்று பிரதேசவாரியான அரசியலிலும் எம்முடன் ஒன்றிணைந்துள்ளார்கள் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பாரம்பரியமான அரசியல் கட்சிகளை காட்டிலும் ஒப்பீட்டளவில் வெற்றிபெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தில் மாத்திரம் ஆளும் தரப்பு 150 உறுப்புரிமையை பெற்றுக்கொண்டுள்ளது.

மன்னார், வவுனியா , யாழ்ப்பாணம் ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி சிறந்த முறையில் வெற்றிபெற்றுள்ளது. ஒருசில பகுதிகளில் பெரும்பான்மை பலத்தை ஆதரவை பெற்றுக்கொண்டுள்ளோம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில்81உறுப்புரிமைகிடைக்கப்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு பிரதேச சபை ஆசனம் கூட கிடைக்கப்பெறவில்லை.ஆகவே,வடக்குமாகாணத்தில் 150 உறுப்புரிமையை பெற்றுக்கொண்டமை வரலாற்று ரீதியிலான வெற்றியாகும். வடக்கு மாகாணத்தில் பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சிகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலும் தேசியத்தை முன்னிலைப்படுத்தி உருவாக்கப்பட்ட கட்சிகளே உள்ளன. இவ்வாறான நிலையிலும் தேசிய மக்கள் சக்தி அங்கும் வெற்றிப்பெற்றுள்ளது.

தேசிய அரசியலுக்கும், பிரதேச அரசியலுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய அரசியலில் வெற்றிபெற்றதை போன்று, பிரதேச அரசியலிலும் நாங்கள் வெற்றிப்பெற்றுள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி தேசிய மக்கள் சக்தி வகுத்த திட்டங்கள் இந்த பெறுபேற்றின் ஊடாக வலுப்படுத்தப்பட்டுள்ளன. - என்றார்.



# வவுனியாவில் 3 ஆயிரம் நாள்களை எட்டிய காணாமல்போனோருக்கான போராட்டம்

தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று (புதன்கிழமையுடன்) 3 ஆயிரம் நாளை எட்டியுள்ள நிலையில் கவனவீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப் போரின் போதும், அதற்கு முன்னரும் காணாமல் போன தமது உறவுகளின் உண்மை நிலையினை வலியுறுத்தி தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா அஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்டம் கடந்த 8 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் போராட்டம் ஆரம்பித்து இன்றுடன் மூவாயிரம் நாள்களை கடக்கின்ற நிலையில் அவர்களது போராட்டம் தீர்வின்றி தொடர்ந்து செல்கின்றது. இதனையடுத்து, அவர்களால் கவனவீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் ஐரோப்பிய அமெரிக்க கொடிகளை ஏந்தியிருந்ததுடன், தங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தனர். 100




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# வானம் சிவக்கப் பாடிய கவிஞன் புதுவை இரத்தினதுரை....!

ஈழத்திலும் எம்மவர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட கவிஞர் புதுவை இரத்தினதுரை. இவர் எழுதிய எழுச்சிப் பாடல்கள் உலகெங்கும் எம்மவர் பலரது வீடுகளிலும் விரும்பிக் கேட்கப்பட்டன.

அன்று எழுபதுகளில் இவர் எழுதிய புரட்சிகரக் கவிதைகள் பேராசிரியர் கைலாசபதி முதல் மூத்த எழுத்தாளர்கள் செ.

கணேசலிங்கன் கே. டானியல், சில்லையூர் செல்வராசன் டொமினிக் ஜீவா உட்படப் பலரையும் கவர்ந்தது.

அவரது சிறிய தந்தையார் கந்தசாமி இலங்கையில் சிறந்த சிற்பாசாரியார். அவரது வீடும் சிற்பாலயமும் திருநெல்வேலி காளி கோவில் முன்பாக இருந்தது. சிற்பாசாரியார் கந்தசாமி அன்று மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்.



சிறிய தந்தையாரின் சிற்பாலயத்தில் இரத்தினதுரையும் சேர்ந்து பணியாற்றி வந்தார். நாட்டில் பல கோவில்களுக்கானசித்திரத் தேர்களைச் செய்யும் வேலைகளை அவர்கள் மேற்கொண்டார்கள்.

இரத்தினதுரை புத்தூர் கிராமத்தைப்பிறப்பிடமாகக் கொண்டவர். வரதலிங்கம் – பாக்கியம் தம்பதிகளின் மகனாக1948ஆம்ஆண்டு மார்கழி மாதம் பிறந்தவர்.

1972 ஆம் ஆண்டு முதல் சில வருடங்கள் யான் அவருடன் நெருங்கிப் பழகியுள்ளேன். கே. டானியலின் தொழிலகத்தில்தான் முதன்முதலில் சந்தித்துக்கொண்டோம். அன்றுதொட்டு நெருங்கிய தோழர்களானோம்.

1973 – 1974 காலப்பகுதியில் சில மாதங்கள் இரத்தினதுரை எனது ஊரான புங்குடுதீவில் தங்கியிருந்தார். புங்குடுதீவு கிழக்குக் கலட்டிப் பிள்ளையார் கோவில் தேர் வேலையில் அவர் ஈடுபட்டிருந்தார்.

அந்த நாள்களில் பத்திரிகை – வானொலிச் செய்தியாளரான யான், கொழும்புப் பத்திரிகைகளுக்கான செய்திகளை அனுப்பப் புங்குடுதீவுத் தபால் நிலையத்தில் காத்திருந்து, பிற்பகல் 4.00 மணிக்குப் புங்குடுதீவு இறுப்பிட்டித் துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவரும் 'மெயில் பஸ்'ஸில் உள்ள தபால் பெட்டியில் செய்தித் தபால்களைச் சேர்த்துவிட்டு, இரத்தினதுரை வேலைசெய்யும் கோவிலடிக்குச் சைக்கிளில் செல்வதுண்டு;.

மாலை 5 மணிக்குப்பின் அவர் வேலை முடித்துக் குளித்துவி;ட்டு வந்தவுடன் என்னுடன் அழைத்துச்செல்வேன். எனது அக்கா வீடு எனது பொறுப்பில் இருந்தது. (அக்கா அவ்வேளை மட்டக்களப்பில் கமத்தொழில் திணைக்களப் பெரும்பாக உத்தியோகத்தராகப் பணிபுரிந்தார். அந்த வீட்டில் இரத்தினதுரை மற்றும் எனது ஓரிரு நண்பர்களுடனும் தங்கியிருந்து உல்லாசமாக இலக்கிய விடயங்களைப் பேசுவோம். கவிதை பாடுவோம்.. மகிழ்ச்சியாகப் பொழுது கழியும்.

அந்த நாள்கள் மிக இனிமையானவை..!

1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளில் நாம் கலந்துகொண்டோம். நெல்லியடியில் 'அம்பலத்தாடிகள்' நடாத்திய சித்திரை விழாவில் சில்லையூர் செல்வராசன் தலைமையில் கவியரங்கில் பங்குபற்றினோம். இவ்விழாவில் பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோரின் சிறப்புரைகளுடன் 'கந்தன் கருணை' நாடகமும் அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்திலுள்ள ஐந்து இலக்கிய அமைப்புகள் ஒன்றிணைந்து திருமலையில் 1974 இல் நடத்திய 'புரட்சிகரக் கலைஞர் எழுத்தாளர் மாநாட்டின்' அமைப்பாளர்களில் ஒருவராக இரத்தினதுரை, தோழர் நல்லை அமிழ்தனுடன் சேர்ந்து பணியாற்றினார். இம்மாநாட்டில் கே. டானியல், சில்லையூர் செல்வராசன், செ. கணேசலிங்கன், என். கே. ரகுநாதன் ஆகியோருடன் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நானும் கலந்துகொண்டேன். புங்குடுதீவில் யான் நடத்திய இலக்கிய நிகழ்வுகளிலும் அவர் எம்முடன் கவியரங்குகளில் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வுகளில் கே. டானியல், நாவேந்தன், புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியுள்ளனர். இருபாலையில் நடைபெற்ற பாரதி விழாவில் கவிஞர் முருகையன் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கிலும்; நாம் கலந்துகொண்டோம். அரியாலையில் நடைபெற்ற ஓர் விழாவிலும் நாம் கலந்து கொண்டது ஞாபகம்.

ஏழாலையில், மூத்த சகோதரர் நாவேந்தன் இலக்கியப் பணியின் வெள்ளிவிழா வட மாநிலக் கல்வி அதிபதி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கே. டானியலுடன் இரத்தினதுரையும் பங்குபற்றிச் சிறப்பித்தார்.

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் (தொழில் நுட்பக் கல்லூரி) நடைபெற்ற லோகேந்திரலிங்கத்தின் (கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர்) 'போலிகள்' புதுக்கவிதை நூல் வெளியீட்டு விழாக் கவியரங்கிலும் நாம்

கலந்துகொண்டோம். இந்நிகழ்வில் சிறு சலசலப்பு ஏற்பட்டபோது இரத்தினதுரை உணர்ச்சி வசப்பட்டு எழுந்து சொன்ன

வரிகள்.....

'சந்தியில் இறங்கிவிட்டால்
சாரத்தை இழுத்துக் கட்டிவிட்டால்
நாங்களும் சண்டியர் தாம்
தம்பிகள் இருங்;கடா... '

– என்று சில வரிகள் சொன்னது ஞாபகம்..!

திருமலையில் இடம்பெற்ற பாரதி விழாவிலும் நாம் சில்லையூர் தலைமையில் கவியரங்கில் பங்குபற்றியமை ஞாபகம்.

அன்று சமூக விழிப்புணர்வும், எழுச்சியும் கொண்ட கவிதைகளை அவர் எழுதினார். கவிதைக்குரிய ஓசை நயத்தையும் அவர்

கவனத்திலெடுத்துள்ளார்.

அவரது முதல் கவிதைத் தொகுப்பு 'வானம் சிவக்கிறது' 1970 ஆம் ஆண்டு 'கம்யூனிஸ்ட்' கார்த்திகேசன் மதிப்புரையுடனும்கவிஞர் முருகையனின் முன்னுரையுடனும் வெளியானது.

அன்று தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்புக் கட்சியென அழைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின்

ஆதரவாளராக அவர் செயற்பட்டார்.

'அ தொடங்கியுள்ள அரிவரிகள் சிற்சிலரால்
சீனாவின் தாசனெனச் சீல் குத்தப்பட்டவன் நான்..'
– என அவர் எழுதியதுண்டு;.

சீனப் பெருந்தலைவர் மாஓவின் வழி நிற்பவன் என அவர் கவிதைகளில் குறிப்பிட்டுள்ளார்.

'சீனாவைப் பாடுவதால்..
சீனாவைப் பாடுவதால்
செங்கொடியைப் பாடுவதால்
ஏனோ சில 'கவிஞர்'
எம்மீது துள்ளுகிறார்
எங்கள் கவிதைகட்கு
இருக்கின்ற 'மவுசு' சில
வெம்பற் கவிஞருக்கு
வேதனையைக் கொடுக்கிறதாம்... ..'
– எனவும் எழுதியுள்ளார்.

எழுபதுகளில் 'குமரன்' சஞ்சிகையில் வரதபாக்கியான் என்ற புனைபெயரில் அவர் எழுதிய கவிதைகள் அதிகம்..

'ஆண்டவரே ஆண்டாண்டு அலுத்தவரின் பரம்பரைகள்
மீண்டாண்டுஆண்டுமுடிவென்னகண்டுவிட்டோம்
இரண்டு பெருங்குடும்பம் இலங்கையதை ஆண்டாண்டு
உருண்டு புரண்டெழுந்தும் உழைப்பவர்கள் கண்டதென்ன..?
மாவில்லை சீனிஇல்லை மருந்துக்குக்கூட இங்கு
ஆ ஒரு உள்ளிப்பூடு அரைத்திடக் கிடைப்பதில்லை
அரிசியுமில்லை போடஆடைகள் இல்லை வாய்க்கு
உருசியாய்த் தின்னயேதும் உள்ளதா ஒன்றுமில்லை... ...
பிண்ணாக்கிற் பிட்டவித்து புற்துளிரில் கறிசமைத்து
அண்ணாக்கில் ஒட்டுவதை ஆகாரம் என்றெமது
பச்சைக் குழந்தைகளின் பால்வயிற்றை நிரப்புகின்றோம்
நச்சுப் பொருள்தவிர நாறலையும் தின்னுகின்றோம்
தொங்குமணி மாடங்கள் சோலைநிழற் பூமரங்கள்
அங்கம் மினுக்கியுமை அழகுசெய்யும் சாதனங்கள்
தங்கம் வைரநகை சயனிக்கும் இரும்பறைகள்
கங்குல் பகலாக்கிக் கண்சிமிட்டும் மின்விளக்கு
உங்கள் பெருங்கார்கள் உலாவிவரும் நீண்டதெரு
எல்லாம் படைத்துமக்கு எழில்வாழ்வு தந்தவர்கள்
கல்லாய் வெறும்வயிறாய் கண்துயிலல் நீதியெனில்
பொல்லா அந்நீதியினைப் போட்டெரிக்க நாமெழுவோம்..!'

அவரின்இக்கவிதையைஅரங்கில்கேட்டவுடன்எனக்குப்பாடமாகிவிட்டது. இதனைப் பல மேடைகளில் யான் குறிப்பிட்டுப்

பேசியமை அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்ததுண்டு;.

'ஒரு தோழனின் காதற் கடிதம்' என்ற அவரது கவிதை விமர்சனத்திற்காளாகியதுமுண்டு.

அக்கவிதையில் காதல் ரசம் சொட்ட கருத்துச் சொல்லியிருப்பார்.

'நள்ளிரவில் வந்து நாய்க்குப் பயந்தொதுங்கி
மெல்ல மூலையிலே சந்தித்துன் புறமுதுகு
ஊசி கழற்றுவதற்கோ உண்மையிலே நேரமில்லை
ஏனென்றால் நானோரியக்கத்தில் நாடிநரம்பாகிப் போனேன்..'
– என்றவாறு தொடரும் அவர் கவிதை.

காதல் மணம் புரிந்துஇ அவரது முதல் மகள் மாலிகா பிறந்து 31 ஆம் நாளன்றுஇ குழந்தையைத் தொட்டிலிலிடும் நிகழ்வுக்கு

வீட்டிற்கு வருமாறு 'போஸ்கார்ட்'டில் கவிதை மூலம் தோழர்கள் எமக்கு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார்.

'பெற்றதாய் எதிராய் வந்து
புரட்சியின் போது ஏதும்
குற்றங்கள் செய்தா லெங்கள்
குண்டுகள் அவளின் நெஞ்சைப்
புற்றுகள் ஆக்கும் ஆமாம்
புரட்சியின் போது நாங்கள்
சுற்றமும் துணையும் பாரோம்...

– எனத் தொடரும் அவரது அதிதீவிரக் கவிதையும் விமர்சனத்திற்குள்ளாகியது.

1977 இல் நாட்டில் ஏற்பட்ட பேரினவாத நடவடிக்கையின்போது சிலாபம் முனீஸ்வரன் கோவில் தேர் எரிக்கப்பட்டமை

அவரின் மனதில் ஆற்றொணாச் சீற்றத்தை ஏற்படுத்தியதாம். அத்தேர் செய்யும் பணியில் அவர்

பங்குபற்றியிருந்தார். அந்தச் சீற்றத்தினால் சிங்கள மக்களையே சபித்துக் கவிதை எழுதியமையும்

விமர்சனத்திற்குள்ளாகியது.

அவரது அரசியல் பார்வையிலும்; மாற்றம் ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களைச் சந்திப்பதைக்

குறைத்துக்கொண்டார். டானியலைச் சந்திப்பதையும் தவிர்த்துக்கொண்டார்.

சிங்கப்பூர் சென்று சில காலம் பணிபுரிந்தார்.

நாடுதிரும்பியபோது என்னைச் சந்தித்துப் பல்வேறு அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

பேராசிரியர் கைலாசபதியின்மீது மிகுந்த அபிமானம் அவருக்கிருந்தது. சிங்கப்பூரில் பணிபுரிந்தபோதும்

கைலாசபதியுடன் கடிதத் தொடர்பிலிருந்ததாகச் சொன்னார்.

கைலாசபதி இறந்தபோது மிகுந்த கவலையடைந்தார். அவ்வேளை இரு அஞ்சலிக் கவிதைகளை அவர் எழுதியுள்ளார். மூத்த எழுத்தாளர் செ. கணேசலிங்கன் வெளியிட்ட 'குமரன்' சஞ்சிகையில் 'ஆய்வறிவின்



தலைமகனை அஞ்சலிப்போம்' என்ற அவரது அஞ்சலிக் கவிதை வெளியாகியது.

'சிம்மாசனம் காலி.. சிற்றரசர் எவருமில்லை
சும்மா அதைவந்து தொடும் தகுதிகூட இல்லை
சிலகாலமல்ல.. சிலவேளை நூற்றாண்டு
பலகாலம் கைலாசபதியின் இடம் வெளியாய்
இருக்கும்இ அதைநிரப்ப எவருமில்லை எவருமில்லை
தொம்சன் முதல் எங்கள் துரையப்பாபிள்ளைவரை
அருணகிரி தொடக்கம் அல்தூசர் வரையாவும்
ஆய்ந்தறிந்து ஆழம் அளவிட்ட மேதையவன்
சாயும்வரை அந்தச் சந்தனக்கை ஓயவில்லை... ..'

– எனத் தொடரும் அவரது அஞ்சலிக் கவிதை..!

டொமினிக் ஜீவாவின் 'மல்லிகையிலும்' 'இது வீர வழிபாடல்ல... ஒரு வேதனைப் பாடல்..' என்ற அவரது அஞ்சலிக் கவிதை வெளியாகியது.

டானியல் தமிழகத்தில் 1986 இல் காலமாகியபோது யாழ்ப்பாணத்தில் டானியல் வீட்டிற்குச் சென்று துக்கத்தைப் பகிர்ந்துகொண்டார்.

டானியலுக்கும் அஞ்சலிக் கவிதையொன்றினை மனமுருகி 'மல்லிகையில்' எழுதியுள்ளார். தீவிரத் தமிழ்த் தேசியவாதியாக அவர் மாறியபின் பல பாடல்களை எழுதியும் புகழ்பெற்றார். ஒலிநாடாவில் வெளிவந்த 'களத்தில் கேட்கும் கானங்கள்' பாடல்கள் பலராலும் விரும்பிக் கேட்கப்பட்டதுண்டு;.

'வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகிறேன்..' போன்ற பல பாடல்கள்; பலர் மனதை ஈர்த்ததுண்டு;. நல்லூர் முருகனைக் கண் திறந்து பார்க்கும்படி அவர் எழுதிய பாடல்களும் பலரைக் கவர்ந்தது. வரதபாக்கியான், மணிமேகலை, வியாசன், மாலிகா போன்ற புனைபெயர்களிலும் அவர் கவிதைளை எழுதியுள்ளார்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமாதானப் பேச்சு நடைபெற்ற நேரம், திருமலை முற்றவெளியில் தேனிசைச் செல்லப்பாவின் கச்சேரி நடைபெறவிருந்தது. அவ்வேளை யான் அங்கு ஆளணிப் பயிற்சித் திணைக்களத்தில் பதிப்பாசிரியராகக் கடமையாற்றி வந்தேன்.

செல்லப்பாவின் கச்சேரி நடைபெறுவதற்கான மேடையலங்காரம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. யான் முற்றவெளிக்கு

முன்பாக வீதியோரம் மதிலோடு சைக்கிளை வைத்துவிட்டுஇ நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன்;. மாலை 5 மணியிருக்கும். ஒரு பழைய வெள்ளைநிற 'லான்ட் றோவர்' போன்ற ஒரு வாகனம் வந்து என்னருகில் நின்றது. அதில் இரத்தினதுரை இருந்தார் என்னை அதில் ஏறுமாறு கேட்டார். மேடை அலங்காரத்தைக் கவனிக்கப் போவதாகவும் என்னையும் வருமாறு கூறினார். நான் சைக்கிளில் வருகிறேன் எனக் கூறினேன்.

சைக்கிளில் சென்று மேடைக்குப் பின்னால் சைக்கிளை வைத்துவிட்டுஇ முன்னால் மேடையைப் பார்த்துக்கொண்டு நின்ற அவர் அருகில் சென்றேன். சில இளைஞர்கள் மேடையை அலங்கரித்துக்கொண்டிருந்தார்கள்.

இரத்தினதுரையைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரியமாகவிருந்தது. 'இதென்ன கோலமடாப்பா... ..' என்றேன். கவிஞர் இரத்தினதுரை அவரது இயக்கச் சீருடையில் இருந்தார்.

'இடத்திற்கேற்ற உடைதான்... .. சரி... இன்று இங்க மேடையில பேசுகிறாயா..' எனக் கேட்டார்.

'வேண்டாம்.. நான் அரச வேலையிலிருக்கிறேன்;..' என்றேன்.

'நீங்க இன்னும் சரியாச் சிந்திக்கேல்லை.. உங்களைத் திருத்த ஏலாது..' என்றார்.

'சரி.. பிறகு சந்திப்போம்..' எனக்கூறி நான் சென்றுவிட்டேன்.

அதுதான் இரத்தினதுரையுடனான கடைசிச் சந்திப்பாயிருக்குமென நான் நினைக்கவில்லை.

1991 இல் யான் பிரான்ஸ் நாட்டிற்கு வந்துவிட்டேன். 2009 இறுதி யுத்தத்தின்போது அவர் காணாமற்போனார் என்ற செய்தி கவலையளித்தது.

எழுபதுகளில் அவர் எழுதிய புரட்சிகரக் கவிதைகள், நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சிக்கும், தீண்டாமைக்

கொடுமைகளுக்கெதிரான போராட்டங்களுக்கும் உந்துசக்தியாயிருந்தன என்று கூறலாம்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவர் நாமம், அவரது புரட்சிகரக் கவிதைகளுக்காக அவசியம் பதியப்பட வேண்டியதே..!

**- வி. ரி. இளங்கோவன்.**

# நில அபகரிப்பிற்கு எதிரான மே 29 போராட்டத்திற்கு அனைத்து தமிழ் கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும்

## சுமந்திரன் தெரிவிப்பு

ஆறாயிரம் ஏக்கர் தமிழர் நிலத்தினை அபகரிக்கும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக மே 29 ஆம் திகதி இடம்பெறவுள்ள பாரிய மக்கள் போராட்டத்திற்கு அனைத்து தமிழ் கட்சிகளும் தங்கள் ஆதரவை வழங்கவேண்டும் என இலங்கை தமிழரசுகட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தமிழ்தேசிய கூட்டமைப்பு பிரிந்துவிட்டது உடைந்துவிட்டது என சொல்கின்ற செய்திகளை எல்லாம் கடந்த காலத்திலே நான் மறுத்துவந்திருக்கின்றேன்.

நாடாளுமன்றத்தின் இறுதிவரைக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பாக இயங்கினோம் நாடாளுமன்ற தேர்தலிலே அவர்கள் தனித்து போட்டியிட்டார்கள். நாடாளுமன்ற தேர்தலிலே தனித்து போட்டியிடக்கூடாது. இந்தத் தேர்தலில்தான் தனித்து போட்டியிடவேண்டும்.

இந்த வேளையிலே நாங்கள் சொன்னதுதான் சரி அவர்கள் சொன்னது பிழை என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க விரும்பவில்லை. நாங்கள் சேர்ந்து இயங்கவேண்டிய காலம். நேரம்.

மிகவும்விசேடமாக, எங்களுடையநிலங்களிலே6000 ஏக்கர் பறிபோகின்ற சூழ்நிலை எழுந்திருக்கின்றது.

நான் ஏற்கனவே அதற்கான ஓர் அறைகூவலை விடுத்திருக்கின்றேன், மீண்டும் நான் மக்கள் ஆணையுடன் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு கோரிக்கையை முன்வைக்கவிரும்புகின்றேன்.

2025 மார்ச் மாதம் 28 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி பிரசுரத்தை உடனடியாக மீளப்பெறுமாறு மக்கள் ஆணையோடு கோருகின்றோம்.

அது உடனடியாக மீளப்பெறவேண்டும் மே 28 வரை அரசாங்கத்திற்கு காலக்கெடுவை வழங்குவதாக நான் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றேன்.

மற்ற தமிழ் கட்சிகளிற்கு ஓர் அன்பான வேண்டுகோள், அரசாங்கம் இந்த வர்த்தமானியை மீளப்பெறாமலிருந்தால் மே 29 ஆம் திகதி அதற்கு எதிராக பாரிய மக்கள் போராட்டமொன்றை முன்னெடுப்போம். அனைத்து கட்சிகளும் அதற்கு இணைந்து வரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இதுஇலங்கைதமிழரசுகட்சி பொதுச்செயலாளராக நான் விடுக்கும் அழைப்பாகயிருந்தாலும் கூட பொதுவாக மக்கள் சார்பாக விடுக்கப்படுகின்ற அழைப்பாக ஏற்று ஒரு கட்சி விடுக்கின்ற வேண்டுகோளாக அதனை கருதாமல் பொதுவாக அனைவரும் ஒன்றுசேர்ந்து அதனை செய்யவேண்டும். அதற்கு முன்னர் அரசாங்கம் அந்த வர்த்தமானியை மீளப்பெறவேண்டும். இல்லாவிட்டால் பாரிய மக்கள் போராட்டத்தை முன்னெடுப்போம். நிலம் அழிந்தால் அனைத்தும் அழிந்துபோகும். - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.05.2025இல் வெளியிடப்பெற்றது